செய்தி வெளியீடு எண் :1074 நாள்: 30.06.2022

## செய்தி வெளியீடு

**இராணிப்பேட்டை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.118.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இராணிப்பேட்டை புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் மற்றும் ரூ.32.18 கோடி செலவிலான 23 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.22.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 71,103 பயனாளிகளுக்கு ரூ.267.10 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (30.06.2022) இராணிப்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.118.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் மற்றும் ரூ.32.18 கோடி செலவிலான 23 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.22.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 71,**103** பயனாளிகளுக்கு ரூ.267.10 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**இராணிப்பேட்டை புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம்**

இராணிப்பேட்டை கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில், **13.40** ஏக்கர் நிலப்பரப்பளவில், ரூ.**118.40** கோடி செலவில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் கட்டப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியரக கட்டடம், தரை தளம் **5684** ச.மீ பரப்பளவிலும், முதல் தளம் **5500.50** ச.மீ பரப்பளவிலும், இரண்டாம் தளம் **6003** ச.மீ பரப்பளவிலும், மூன்றாம் தளம் **5325** ச.மீ பரப்பளவிலும், நான்காம் தளம் **5325** ச.மீ பரப்பளவிலும், ஐந்தாம் தளம் **623** ச.மீ பரப்பளவிலும், முகப்பு மண்டபம் **250.50** ச.மீ பரப்பளவிலும் என மொத்தம் **28,711** ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தின் தரைத்தளத்தில் வருவாய் பிரிவு அலுவலகம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட கருவூலம், மக்கள் குறை தீர்வு அரங்கம், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் மற்றும் எல்காட் பிரிவு அலுவலகங்களும், முதல் தளத்தில் மாவட்ட ஆட்சியர் அறை, சிறு கூட்டரங்கம், மாவட்ட வருவாய் அலுவலர் அறை, நேர்முக உதவியாளர்கள் மற்றும் பிரிவு அலுவலகங்கள், கலந்தாய்வு அரங்கு, தேர்தல்

மற்றும் வருவாய் அலுவலகங்களும், இரண்டாம் தளத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் அறை, கூட்டரங்கம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகம், சிறுகூட்டரங்கம், கலந்தாய்வு அரங்கு, திட்ட இயக்குநர் (ICDS) அலுவலகங்களும், மூன்றாம் தளத்தில் கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் மற்றும் பதிவுத்துறை அலுவலகங்கள், இணை இயக்குநர் (வேளாண்மை) பிரிவு அலுவலகம், இணை இயக்குநர் கால்நடை பராமரிப்பு பிரிவு அலுவலகம், இணை இயக்குநர் (பொது சுகாதார பிரிவு), திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) அலுவலகங்களும், நான்காம் தளத்தில் வனத்துறை அலுவலகம் மற்றும் சிறு கூட்டரங்கம், முதன்மை கல்வி அலுவலகம் மற்றும் மாவட்ட ஆரம்ப கல்வி அலுவலகம், ஆதிதிராவிடர் நலத்துறை, கோட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்), தமிழ் வளர்ச்சித்துறை, கனிம வளத்துறை, கூட்டரங்கம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வளாகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், 12 மின்தூக்கிகள், அனைத்து தளங்களிலும் மாற்றுதிறனாளிகளுக்கான கழிப்பறை வசதி மற்றும் சாய்தள வசதி, மழைநீர் சேகரிப்பு வசதி, கட்டடத்தை சுற்றிலும் சாலை வசதிகள், அலங்கார தெரு விளக்குகள், செயற்கை நீரூற்றுடன் பூங்கா போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

<u>திறந்து வைக்கப்பட்டுள்ள முடிவுற்ற திட்டப்பணிகள்</u>

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 13.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாலாஜா, சோளிங்கர், ஆற்காடு, கலவை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் சோளிங்கர், வாலாஜா மற்றும் கலவை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடங்கள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 5.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆற்காடு மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், 1.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீக்கராஜபுரம், சிறுகரும்பூர் ஆகிய 2 ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், கே.வேளூர், சோமசமுத்திரம், ஆயிரமங்களம், முகுந்தராயபுரம் ஆகிய 4 ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடங்கள், சிறுணமல்லி மற்றும் வசூர் ஆகிய 2 ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள்,

செம்பேடு மற்றும் கம்மாபாளையம் ஆகிய 2 ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடங்கள்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாலாஜா வட்டாரம், லாலாபேட்டை மற்றும் திமிரி வட்டாரம் கலவை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள்;

உயர்கல்வித்துறை சார்பில் 5.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாலாஜா அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கட்டப்பட்டுள்ள 30 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம்;

நீர்வளத்துறை சார்பில் 5.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரக்கோணம் வட்டம், அரிகில்பாடி கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தளமட்ட சுவர் (தடுப்பணை);

**என மொத்தம் 150 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவிலான 24 முடிவுற்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**<u>அடிக்கல் நாட்டப்பட்டுள்ள புதிய திட்டப்பணிகள்</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 10.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள இராணிப்பேட்டை புதிய பேருந்து நிலையம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கன்னிகாபுரம்– பொன்னமங்கலம் சாலை, செய்யாறு ஆற்றின் குறுக்கே கட்டப்படவுள்ள உயர்மட்டப் பாலம்;

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் 7.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராணிபேட்டை மற்றும் அரக்கோணம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டப்படவுள்ள புதிய பணிமனைக் கட்டடங்கள் (Work Shop);

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 48.30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆற்காட்டில் கட்டப்படவுள்ள கால்நடை மருந்தகம்;

**என மொத்தம் 22 கோடியே 19 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**<u>பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள்</u>**

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில் 14,828 பயனாளிகளுக்கு உதவிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 5133 பயனாளிகளுக்கு தனிநபர் பண்ணைக்குட்டை அமைத்தல், பிரதமர் குடியிருப்புத் திட்டம் உள்ளிட்ட உதவிகள்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 14,507 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்குதல், மாதாந்திர உதவித்தொகைத் திட்டம், நலிந்தோர் உதவித்தொகை உள்ளிட்ட உதவிகள்; மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் **5802** பயனாளிகளுக்கு தண்டுவடம் பாதிக்கப்பட்டவருக்கான மோட்டார் பொருத்திய ஸ்கூட்டர் வழங்குதல், திறன்பேசி, காதொலிக்கருவி, ஈமச்சடங்கு நிதயுதவி உள்ளிட்ட உதவிகள்;

தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் **369** பயனாளிகளுக்கு வங்கிக்கடன், சமுதாய முதலீட்டு நிதி, தனிநபர் கடன் உள்ளிட்ட உதவிகள்; மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் சார்பில் **1740** பயனாளிகளுக்கு முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு உதவித்தொகை, மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் உதவிகள்;

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 1567 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்கள், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்ட வைப்புத்தொகை பத்திரம் உள்ளிட்ட உதவிகள்;

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் **735** பயனாளிகளுக்கு வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம், உறுப்பினர்கள் ஊக்கத்தொகை, விவசாய கடன் அட்டை உள்ளிட்ட உதவிகள்;

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் 40 பயனாளிகளுக்கு புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உதவிகள்; வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 1021

பயனாளிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், நுண்ணுயிர் பாசனத்திட்டம், ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம், முதலமைச்சரின் சூரியசக்தி பம்புசெட்டுகள் அமைத்தல், பண்ணைக்குட்டை அமைத்தல், தேசிய தோட்டக்கலை இயக்கம் மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட உதவிகள்;

மேலும், கூட்டுறவுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தித் துறை, வேளாண்மை பொறியியல் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கனிமங்கள் மற்றும் சுரங்கத்துறை, தோட்டக்கலைத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பால்வளத் துறை, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் **மொத்தம் 71,103 பயனாளிகளுக்கு 267 கோடியே 10 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன், திரு.கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜே.எல்.ஈஸ்வரப்பன், திரு.ஏ.எம்.முனிரத்தினம், திரு. நந்தகுமார், திரு. கார்த்திகேயன், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமை செயலாளர் திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in